செந்தமிழ்

தொகுதி -90 நவம்பர் -96 பகுதி -11

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை -1.

பொறுப்பாசிரியர் : பேரறிஞர் நா.பாலுச்சாமி

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ. கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை,

பேரறிஞர். பழநி. அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பேரறிஞர். ம. ரா. போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேரறிஞர். சி. கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர். கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர். அ. அ. மணவாளன்
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர். க. ப அறவாணன்
மத்திய பல்கலைக்கழகம், புதுவை

பேரறிஞர் சூ. இன்னாசி
கிறித்துவத் தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

பெரும்புலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேரறிஞர். சி. மொ. இராசேந்திரன்
செந்தமிழ்க் கல்லூரி மதுரை

பேரறிஞர். ந. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி மதுரை

பேரறிஞர். திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கழைக் கழகம்

பேரறிஞர். நா. ந மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர். தியாகராசர் கல்லூரி மதுரை

பேரறிஞர். திருமதி சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

பேரறிஞர். எஸ் எம். கமால்
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

பேரறிஞர் ஈ. கே இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை

பேராசிரியர் சே. அரிராமநாதன்
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் ந. பாலுசாமி 423

2. திருமூலர் நெறி

பேரறிஞர் சுப அண்ணாமலை 428

3. அபிராமி அந்தாதி

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி 433

4. இளங்கோவின் காப்பிய உத்தியும் குறிக்கோளும்

பேரறிஞர் தெ திருஞானமூர்த்தி 440

5. தமிழ் அகராதியியல் மரபுகளும் வளர்ச்சியும்

பேரறிஞர் எச். சித்திரபுத்திரன், 447

6. எனைத்தானும் நல்லவை வினாவுக

463

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா. பாலுசாமி

முன் இதழ்த் தொடர்ச்சி

(தொல்—சொல்—வேற்றுமை மயங்கியல்)

முன்னியலில் வேற்றுமை உருபுகள் பற்றியும் அவை எவ்வெப் பொருளில் வரும் என்பது பற்றியும் அறிந்தோம். இவ்இயலில், வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கி வருவது பற்றி அறிவோம். வேற்றுமை—வேற்றுமை உருபுகள்; மயக்கம்—தம்முள் அவை பொருள் வேறுபாடு கொள்ளுதல்; அஃதாவது, ஓர் உருபு வரவேண்டிய இடத்தில், பிறிதோர் உருபு வந்து நிற்றல்.

வேற்றுமை மயக்கம் இருவகைப்படும். ஒன்று, உருபு மயக்கம்; மற்றொன்று, பொருள் மயக்கம். ஒரு வேற்றுமை உருபு, ஒரு சொற்றொடரில், மற்றொரு வேற்றுமை நிற்கவேண்டிய இடத்தில், தன் பொருளுக்குச் சிறிதும் பொருந்தாமல் நிற்றல்; அஃதாவது, தன்பொருளை முற்றிலும் இழந்து நிற்றல். இவ்வாறு நிற்பது வேற்றுமை உருபு மயக்கம் எனப்படும். (எ-டு) காலத்தினால் செய்த நன்றி.....ஞாலத்தின் மாணப்பெரிது (குறள் 102) என்னும் குறளில் வரும் **காலத்தினால்** என்னும் தொடரில் வந்துள்ள **ஆல்**

என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு. தனக்குரிய கருவி, கருத்தா உடன்நிகழ்வு என்னும் பொருள்களில் வாராமல், கண் என்னும் ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்து நிற்றலால், இது உருபு மயக்கம் ஆகும். இங்கு மூன்றாம் வேற்றுமை உருபாகிய 'ஆல்' தன் பொருளை இழந்துவிட்டு ஏழாம் வேற்றுமை உருபாகிய 'கண்' என்பதன் பொருளில் (இடப் பொருளில்) வந்துள்ளமை அறிக. காலத்தினால் என்பது, 'காலத்தில்' செய்த உதவி எனப் பொருள்படும்.

இனிப் பொருள் மயக்கம் என்பது, ஒரு வேற்றுமை உருபு தன்பொருளை விடாமல் (இழக்காமல்) மற்றொரு வேற்றுமைப் பொருளில் வருவது. (எ-டு) அரசர்ச் சார்ந்தான் என்னும் தொடர், அரசரைச் சார்ந்தான் என 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமைப் பொருளிலும். அரசர்கண் சார்ந்தான் என வரும்போது 'கண்' என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளிலும் மயங்கி வருவது அறிக. இங்குக் கூறியவற்றால், உருபு மயக்கமும் பொருள் மயக்கமும் வெவ்வேறானமை என்பது தெளியப்படும். உருபுமயக்கமும் வேற்றுமை (பொருள்) மயக்கமும் ஒன்றே என்று கூறி மயங்குவாரும் உள்ளனர். அவர்கள் கூறுவது தவறாகும்.

சூத்திரம் : 84

(வேற்றுமை உருபுகள் மயங்குதல்)

கருமம் அல்லாச் சார்புஎன் கிளவிக்கு
உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை

(ப.ரை) கருமம் — உடல்சார்ந்த தொழில், அல்லா — அல்லாத, சார்பு — மனத்தால் கொள்ளும் சார்பு, என் கிளவிக்கு — என்னும் சொல்லுக்கு, கண் என் வேற்றுமை — கண் என்னும் வேற்றுமை உருபு, உரிமையும் உடைத்து — உரியதும் ஆகும்.

உடல்சாராத (பொருந்தாத) மனத்தால் சார்புடைய சொற்றொடருக்கு இடப்பொருள் தரும் ஏழாம் வேற்றுமை உருபாகிய 'கண்' என்பதும் வருவதற்கு உரிமை உடை தாகும்.

(வி.ரை) கருமம் — உடல் பொருந்திய தொழில்; தூணைச் சார்ந்தான், நாட்டைச் சார்ந்தான் என வரும் தொடர்களில் ஒருவனது உடற்சார்பு உள்ளது. இவ்வாறு அன்றி, அரசர்ச் சார்ந்தான், அரசரைச் சார்ந்தான் எனவரும் தொடர்களில், மனத்தால் சார்ந்தான் (அரசர்வழி நடந்தான், அவன் கருத்துப்படி நடந்தான்) என்பதே பொருந்தமாகும். சார்புப் பொருள் இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' க்குரியது; ஆனால், 'கண்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபும் அப்பொருளில் மயங்கி வருகிறது. எனவே இது பொருள் மயக்கமாகும். பொருள் மயக்கம் பெரும்பாலும் தொகை நிலைத் தொடர்களில் வரும். சார்பு (சார்தல்) உடலால் சார்தலும் மனத்தால் சார்தலும் என இருவகைப்படும் என்பது அறிதல் வேண்டும். சமணம் சார்ந்தான், வைணவம் சார்ந்தான் என்னும் தொடர்கள் மனத்தால் நிகழும் சார்பாம்.

சுருங்கக் கூறினால், 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபுக்குரிய சார்புப் பொருளில் 'கண்' என்னும் இடப்பொருளில் வரவேண்டிய ஏழாம் வேற்றுமை உருபும் வரும் என்பதாம். இஃது, இரண்டாவதன் பொருளில் ஏழாவது மயங்கியதாம்.

எடுத்துக்காட்டுகளும் மேலேகண்ட விளக்கவுரையில் தரப்பட்டுள்ளன.

சூத்திரம்: 85

சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்

(ப.ரை) சினை நிலை — உறுப்பின் மேல் நிற்கும், கிளவிக்கு— சொல்லுக்கு, ஐயும் கண்ணும் — ஐ உருபும் கண் உருபும் (இரண்டாவதும் ஏழாவதும்), நிலை வினை—நிலைபெற்ற வினைச் சொற்கள் வருமிடத்து, ஒக்கும் — ஒத்த நிலையில் வரும்.

ஒரு முதற் பொருளின் உறுப்புப் பற்றிய சொல் வருமிடத்தில் ஐ என்னும் இரண்டன் உருபும், கண் என்னும் ஏழன் உருபும் வருதலும் கூடும். (ஒக்கும் — சமநிலையில் வரும்)

(வி.ரை) யானை — முதற் பொருள்; கோடு (கொம்பு) சினைப் பொருள் (உறுப்பு). மரம்—முதற்பொருள்; கிளை—சினைப் பெயர். உடம்பு — முதற்பெயர் — கை, கால் முதலியன சினைப்பெயர்கள், இச்சூத்திரத்தில், ஒரு சினைப் பெயரினிடத்து 'ஐ', 'கண்' இரண்டு வேற்றுமை உருபுகளும் வரப்பெறும் என்பது கருத்து.

(எ–டு) கோட்டைக் குறைத்தான், என்று 'ஐ' உருபும், கோட்டின் கண் குறைத்தான் என்று 'கண்' உருபும் ஒத்த நிலையில் வந்துள்ளன. இவ்வாறு வருதல் பொருந்தும்.

வினை நிலை — என்னும் தொடரை நிலைவினை என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். எல்லா வினை முற்றுகள் வருமிடத்தும் இவ்விரு உருபுகளும் வரும் என்பது பொருந்தாது. பழித்தான், புகழ்ந்தான் என்னும் வினைமுற்றுக்கள் வரின் இவ்வுருபுகள் இரண்டும் ஒத்து வாரா.

கண்ணைப் பழித்தான், புகழ்ந்தான் என்ற தொடர்களில் 'ஐ' மட்டும் வரும்; கண் உருபு வாராது. கண்ணின்கண் பழித்தான், புகழ்ந்தான் என வருவதில்லை. இவ்வினை முற்றுக்கள் போன்றவற்றை விலக்கவே நிலைவினை என்று வரையறை செய்யப்பட்டது என்பது அறிக.

சூத்திரம் 86

கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே

(ப.ரை) கன்றலும் — இவறுதல் என்னும் தொழிலையும், செலவும் — செல்லுதல் என்னும் தொழிலையும் பற்றி வருகிற, வினை — வினைமுற்றுக்களும், ஒன்றும் — இரண்டு, ஏழு ஆகிய உருபுகளுக்குப் பொருந்தி வருவனவாம்.

தொழிலை (செயலை)க் குறித்துவரும் வினைமுற்றுக் களாகிய கன்றினான், சென்றான் என்பனவும் மேற்கூறிய ஐ, கண் ஆகிய உருபுகள் வந்து மயங்குதற்கு உரியனவாம்.

(வி.ரை) கன்றுதல் — வஞ்சித்தல், இவறுதல், செலவு—செல்லுதல். இரண்டும் தொழிற் பெயர்கள். கன்றினான், சென்றான் என்பன தொழில் சார்ந்த தெரிநிலை வினைமுற்றுகள். ஒன்றும் — பொருந்தும். மார் — அசை.

(எ–டு) சூதினைக் கன்றினான், சூதின்கண் கன்றினான் என்றும், நெறியைச் சென்றான், நெறியின் கண் சென்றான் எனவும் வரும். இத்தொடர்களில் ஐ, கண் ஆகிய இரண்டு உருபுகளும் வந்தவாறு காண்க. இதுவும் பொருள் மயக்கம் ஆகும்.

(தொடரும்)

திருமூலர் நெறி

1- அறநெறி

பேரறிஞர். சுப. அண்ணாமலை

அறம் : விளக்கம் :—

அறம் என்பது என்ன? இவ்வினாவிற்குப் பல விடைகள் உள்ளன. ஆயினும் தமிழ் நெறி கூறும் விளக்கத்தை மட்டும் நோக்குவோம்.

''அறம் என்பது செயலே. அதற்கு முதலாவதாக வேண்டுவது மனத்தூய்மை, பொறாமையும், பேராசையும், கோபமும், கடுஞ்சொல் கூறும் குணமும் இல்லாமையே மனத்தூய்மை. இவை உடைமைப் பற்றால் வருபவை. எனவே, இந்தப் பற்று இன்றி, நமது பொருளை, அது இல்லாமையால் வருந்தும் பிறருக்கு உதவ வேண்டும். இதுவே அறம்'' என்பது திருவள்ளுவர் கூறும் விளக்கம் [1]

''ஈதல் அறம்'' என்று ஔவையார் சுருக்கமாகக் கூறினார். திருவள்ளுவரைப் பின்பற்றித் திருமூலர்,

''அற்றுநின்றார் உண்ணும் ஊணே அறன்'' [2]

என்று கூறுகிறார். ஊண் (உணவு) இன்றி, வறுமையுடை— யோராய் உள்ளோர்க்கு அதனை வழங்கி, உண்ணச் செய்தலே

அறம் — என்பது இதன் பொருள். ''ஊணே அறம்'' என்று கூறுவதால், பசி தீர்ப்பதே சிறந்த அறம் என்பது திருமூலர் கருத்து.

யார் பசியால் வாடினாலும், அவரது நாடு, ஊர், மொழி, சாதி, சமயம், கொள்கை, நட்பு, பகை, இவற்றை எண்ணாமல், பசி தீர்க்க வேண்டும் என்னும் கருத்தில்,

''ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்'' என்று ஆணை இடுகின்றார். இப்பாடலைக் ''காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே'' முடிக்கின்றார். இதனை ''காக்கை உண்ணும் காலம் கரைதல் அறிமினே'' என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். ''அற்று நின்றார் உண்ணும்'' என்ற பாடலை,

''உற்று அறிந்து ஆங்கு ஓர்
கூவற் குளத்தினில்
பற்றி நின்று உண்ணும்; பயன் அறியாரே''

என்று முடிக்கின்றார்.

இது ஓர் உவமை. எங்கும் தண்ணீர் இல்லாத பொழுது, பறவைகள் எவ்வாறோ அறிந்துகொண்டு, ஒரு பள்ளத்தில் சிறிதளவு தேங்கி நிற்கும் தண்ணீரை உண்ணக் கட்டமாக வந்து நின்று. உண்டு மகிழும் இந்த உவமையைப் பிறிது மொழிதல் அணியாகக் கூறி, இதனால், வறியவர் எங்கும் தமது துன்பம் தீர்ப்போர் இல்லையாக, கொடுக்கும் அன்பனிடமே வந்து கூடுவர்' என்ற கருத்தைப் பெறவைக்கிறார். அவர்களுக்கு உணவு கொடுத்துப் பசி தீர்ப்பதால் வரும் பயன் ஒன்று உண்டு. நூல்களைக் கற்பதால் அதைத் தெரிந்து கொள்ள இயலாது. நூல்கள் கூறமாட்டா. அனுபவத்தில்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நாடி வருபவரின் பசியைத் தீர்ப்பதால்தான் தெரிந்து கொள்ள முடியும்.

''அற்று நின்றார் உண்ணும் ஊணே அறன் என்னும்
கற்றனபோதம் கழல்பவர் மானிடர்

1. திருக்குறள், பா. எண். 40, 34, 35, 231.

2. திருமந்திரம்: பா. எண். 253.

உற்று நின்று ஆங்கு ஓர் கூவற் குளத்தினில்
பற்றி நின்று உண்ணும் பயன் அறியாரே'' 3

இப்பாடலை அடுத்தே ''ஆர்க்கும் இடுமின்'' என்ற பாடலும் உள்ளது. அதில் உள்ள இறுதியடியை மேலே குறிப்பிட்டோம். அதையும், இப்பாடலின் இறுதிப் பகுதியையும் இணைத்து நோக்கினால், ஈவோரின் மன நிலையும் இரப்போரின் மனநிலையும் ஒத்திருப்பதை அறியலாம். அதாவது ஈவோரும் இரப்பவரை எதிர்-நோக்குகின்றார். இறப்போரும் ஈவோர் யார் என நாடி வருகின்றார். மனித நேயம் இரு சாராரிடத்திலும் இருக்கிறது. பசி தீர்ப்பதும் தீர்வதுமான செயலில் இருவர் உணர்வும் ஒருமைப்படுகின்றன. ஆன்ம நேயம் கொள்கின்றன.

இதுவே திருமூலர் குறிப்பிடும் ''போதம்''. போதம் என்பது அறிவு; ஞானம். சாத்திர நூல்கள் இச்சொல்லை 'மெய்யுணர்வு' என்ற பொருளில் வழங்கும்.

திருமூலரின் கருத்துப்படி. இந்த மெய்யுணர்வு, ஈகையால் மட்டும் அன்றி, விருந்தோம்பலாலும், ஒப்புரவு அறிதலாலும் விளையும். இவற்றுள் ஒப்புரவறிதலை, மேலே குறிப்பிட்ட ''ஆர்க்கும் இடுமின்'' என்ற பாடலிலேயே அமைக்கின்றார்.

''பார்த்து இருந்து உண்மின், பழம்பொருள் போற்றன்மின்,
வேட்கை உடையர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்''

— என்ற அடிகளை நோக்குக. ''பழம்பொருள் போற்றன்மின்'' என்பதை முதலில் எடுத்துப் பிற அடிகளை அதன் பின் கொள்ள வேண்டும். பழம் பொருள் என்பது பழமை; வழிவழியாக வரும் உறவினர். ஒருவன் தன் உறவினரின் நலத்தை நாடுதல் இயல்பு. அத்துடன் நில்லாமல், ஊராரின் நலத்தையும் நாடுவதே, குடும்பம் என்று வைத்து, பொருள் ஈட்டி, உண்பதன் பயன் ஆதலின் ''பார்த்து, இருந்து உண்மின்'' என்றார். உண்பது என்பது அனு-பவித்தல். இது ''தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு

3. திருமந்திரம், தானச் சிறப்பு : 5.

வேளாண்மை செய்தற் பொருட்டு'' எனத் திருவள்ளுவர் ''ஒப்புரவறிதல்''—அதிகாரத்தில் கூறியதைப் பின்பற்றியதாகும். அதாவது, இருந்து உண்பது, ஊர்நலம் பார்த்தே என்பதாகும்.

பொருள்களை அனுபவித்து வாழ்வதற்கு ஆசைப்படலாம் தவறில்லை. ஆனால் அதில் தாகம் கொள்ளக்கூடாது. வாழ்வில் எல்லாவற்றையும் நாமே அனுபவித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற அவசரமும் கூடாது. முக்கியமான நாட்டம் ஊராரின் நலம் என்பதில் இருக்க வேண்டும்—என்ற கருத்தில் ''வேட்கை உடையர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்'' என்கின்றார் திருமூலர்.

விருந்தோம்பலை, ''அவ்வியம் பேசி'' என்ற பாடலில் கூறுகின்றார். விருந்து என்பது புதுமை; புதியவர். திருமூலர், இங்குத் தவத்தில் சிறந்த சான்றோரை விருந்தினராக வரவேற்று ஓம்புதலைக் கூறுகின்றார்.

''செவ்வியர் ஆகிச் சிறந்துண்ணும் போது ஒரு
தவ்வி கொடு உண்மின், தலைப்பட்ட போதே''

என்கின்றார்.

தவச்சான்றோரைச் சந்திப்பது அரிது. எப்பொழுதேனும் சந்திக்கக் கூடும். அப்பொழுதே, அவரை இல்லத்திற்கு அழைத்து, உணவு அளித்து, அவர்கள் உண்டபிறகு மீதமிருப்பது ஓர் அகப்பை உணவே ஆயினும், அதை மகிழ்ச்சியுடன் உண்ணுக'' என்று கூறுகிறார் திருமூலர். இருப்பது சிறிது என்றாலும், அது கொண்டு அவர்களை உபசரிக்க வேண்டும் என்பது இதில் உள்ள குறிப்பு. உண்பது பெரிது அன்று, அத்தகைய சான்றோரைச் சந்திப்பதே நன்று, அவர்கள் வாய் மொழி கேட்டலே நன்று என்பது கருத்து.

இனி, காகத்தைக் குறிப்பிடும் பாடலை முழுமையாகக் காண்போம். ''ஆர்க்கும் இடுமின் அவர், இவர் என்னன்மின் பார்த்திருந்து உண்மின், பழம் பொருள் போற்றன்மின் வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின் காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே''

காக்கை உண்ணும் முன்பு, தன் இனத்தைக் கரைந்து அழைப்பது போல, ஈவோர் இரப்பவரை எதிர் நோக்குகின்றனர். ஒப்புரவு செய்வோர், உதவி வேண்டுபவர் தம்மை வேண்டாமலேயே, பொது உதவியாக வழங்குவதற்குக் காத்திருக்கின்றனர். விருந்து ஓம்பும் கருத்து உடையவர், சான்றோரின் சந்திப்பை எதிர் நோக்குகின்றனர். இவர்களின் உணர்வும் உதவியைப் பெறுபவரின் உணர்வும் ஒருமைப்படுகிறது. ஆன்ம நேயம் உண்டாகிறது.

இந்த நேயம்தான், அன்புதான் 'மெய்யுணர்வு' என்கிறார் திருமூலர். இந்த அறங்களைச் செய்யாவிட்டால், இம் மெய்யுணர்வைப் பெற முடியாது என்ற கருத்தில்தான், முன்பு எடுத்துக் காட்டியது போல்,

''கற்றன போதம் கழல்பவர் மானிடர்
.... பயன் அறியாரே''

என்று பாடலை அமைத்தார். அந்த மெய்யுணர்வை மேலும் விளக்கமாக அடுத்த கட்டுரையில் காண்போம். இக்கட்டுரையின் முடிவான கருத்து, 'அறம் செய்வதால் மெய்யுணர்வு உண்டாகும்' என்பதாகும்.

முற்றும்

அபிராமி அந்தாதி

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே.

The tender breasts of gold–like Abirami
Who is verily a lightning flash
And who has slender waist
Was embraced by the Lord
Endowed with matted hair spread out!
Those who worship Her servitors
Who, chanting Her sacred names
Worship Her as perscribed by the Vedas
Will be granted by Her the lordship of the heaven!
They will ride the white elephant
With the accompaniment of many a musical instrument!

91

பதத்தே யருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக வடிமை கொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியும் செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே!

Oh Abirami endowed with mullai-bud like rows of teeth!
The Thirimurthis and the other Celestials worship Thee!
Thou made me Thy servitor
To cling to Thy sacred feet
With a melting heart and follow Thy Agamas way!
Henceforth, I will not he deluded to fall
Into other creeds, nor will I pursue their way! 92

நகையே யிஃபதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதும் நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

This Celestial Mother
Who begot the entire Universe
Is endowed with heaped up breasts
Resembling the lotus buds!
She has eyes which resemble
The eyes of an aged doe!
Her eternal form too
Resembles that of the doe's!
Our calling Her the daughter of Himauan
too is impermanent!

As such, to weigh Her greatness and
become Her slave
Will be a blunder indeed; it will
cause all laugh! 93

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் றாலபிராமி சமயமன்றே !

The devotion to Mother Abirami causes tear-bedewed
The eyes of Her servants that worship Her;
Their hair will stand on ends; their
hearts will overflow with bliss;
Their consciousness will cease to exist;
They'll get intoxicated with ecstasy
Very like the inebriated bees;
Their words will fail;
Their devotion will grant them all these
And they'll even become mad !
If so, Her Vamamarga is exemplary indeed ! 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே !

Oh eternal Meru of all Virtues !
Sea of mercy ! Embodied beauty,
Begotten as daughter by Himavan !

I surrendered at Thy sacred feet
All my possessions at the very moment
I became Thy servitor !
Be it good or evil that befalls me,
It is only Thy concern and not mine. 95

கோமள வல்லியை பல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே !

Abirami is like a tender creeper;
She is Yamala enshrined in the temple
Of the comely lotus flower;
She is flawless; She is a peacock
Endowed with the syamala hue
That can not be painted;
She is the Knower of every art !
Those who worship Her
To the extend possible to them
Will be lords of the sevenfold world ! 96

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தம்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே

The secred Ones like the Sun, The Moon, Agni,
Kubera,
The lotus-dwelling Brahma, Lord Shiva, the
destroyer of the Thiripura,

Sri Vishnu, Saint Agastya Lord Kanda
The One who destroyed His foes wilding
His spear
Lord Ganapathy, Manmatha and countless others
By the fruit of their tapas
Worship Mother Abirami ! 97

ைதவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த வாறும் கரந்தெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகவறி யாமடப் பூங்குயிலே !

Oh Abirami like a tender and comely koel !
Thou step not into the hearts of the unworthy
But stay for even in the truthful hearts
of Thy devotees !
Where did Shiva's axe and the Ganges
on His head take shelter,
When He stroked Thy lotusfeet and
crowned His head with them? 98

குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியல்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பில் கமலத்தின்மீ தன்னமாம்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

Abirami, the One of heavy ear steads
Whom Himavan in days of yore gave us spouse to
the Lord of Kailash
Is a koel in the Kadamba grove,

A comely peacock on the Himalayas,
The emerging sun in the heavens,
And a swan enthroned on a lotus flower ! 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ்
கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்பு
வில்லும்
விழையைப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ண
கையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சிலெப்
போதுமுதிக்கின்றவே !

Abirami's sacred breasts breath
The fragrance of the beautiful wreaths
Of Konrai flowers with leaves !
Her arms which excel in charm
The bamboo stems, Her sugarcane-bow
And arrows the attractive and honeyed
flowers
Which induce desire,
Her rows of pearly teeth and Her eyes
Like those of a doe's
All appear in my heart for ever ! 100

நூற்பயன்

ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்கையிற் பாசாங் குசமும் கருப்பு
வில்லும்
சேர்த்தாளை முக்கண் ணியைத் தொழு வார்க்கொரு
தீங்கில்லையே !

The Palasuruthi

Those who, with devotion worship Abirami
the Supreme Mother
Who is the creator and the sustainer
of the entire universe,
Whose sacred hue is like the
mathulai flower,
Who is the wielder of the cord the goad
and the sugarcane bow,
And who is the triple-eyed One are
never touched by grief !

முற்றும்

இளங்கோவின் காப்பிய உத்தியும் குறிக்கோளும்

பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

கதைவழிக் கலையழகோடு கருத்தை விளக்கும் ஓர் ஒப்பற்ற வடிவம்தான் காப்பியம். கருத்தின் நிலையேற்றிலும் கலையழகின் வெளிப்பாட்டுத் திறனிலும் காப்பியம் தன் இறவாத் தன்மையை உறுதி செய்கின்றது. ஒரு காப்பியத்தின் மெய்யான கலையழகை அதன் உள்ளிருந்து காணலே சிறப்பானதும் முறையானதும் ஆகும். ''ஒரு காப்பியத்தைப் படித்து ஆராய முனையும் போது அதற்குத் திறன்கோல் அதனின்றே வடிக்க வேண்டும் இன்னொரு காப்பியக் கோலை கைக்கொள்ள முற்படுவது நெறிப்பிசகாகும்'' என்பவர் வ.சுப.மா. (கம்பர், ப 5). கால மாற்றத்தால் அழியாத சில மானுட உண்மைகளை ஓர் இலக்கியம் தன் அடிப்படைகளாகக் கொண்டு படைக்கப்பெறும்போது அவ்விலக்கியம் காலத்தால் அழியாத பேரிலக்கியமாகத் திகழ்கிறது.

இவ்வகையில் வினைக்கோட்பாடு தொல்மனிதன் முதல் இன்றைய மனிதன் வரை ஆதிக்கம் செலுத்தும் ஓர் ஆற்றல் மிக்க கோட்பாடாகும் இக்கோட்பாட்டை வைத்து இளங்கோ தம் காப்பியத்தைப் படைத்திருக்கின்றார். இது சிலம்பின் நிலைபேற்றிற்கு

ஓர் அடிப்படையாய் அமைந்துள்ளது. இளங்கோவின் காப்பிய உத்திகளுள் இது தலையாயது. ஏனெனில், வினைக்கோட்பாட்டைத் தம் வாழ்வில் இணைத்துப் பாராத மனிதர் பெரும்பாலும் இலர். எனவே கோவலன் கதை அவர்தம் ஆழ்மனத்திற்கு ஓர் அருமருந்-தாய் அமைந்து சிறக்கின்றது.

இளங்கோவின் காப்பிய உத்திகளுள் தலையாயதாகத் திகழும் வினைக்கோட்பாடே அவர்தம் காப்பியக் குறிக்கோளுமாகும். ''சமணர்களின் மெய்யியலின் நடுக்கருவாக இருப்பது அவர்களின் அணுக் கோட்பாடும் வினைக் (ஊழ்) கோட்பாடும் எனலாம்'' என்பர் அறிஞர். அணுக் கோட்பாடு பிரபஞ்சத்தைப் பற்றியது வினைக் கோட்பாடு உயிர்களோடு தொடர்புடையது. எனவே, உயிர்களோடு தொடர்புடைய வினைக்கோட்பாட்டை இளங்கோ தம் காப்பியத்தில் செம்மையாக விளக்கிச் செல்கின்றார்.

ஒரு பிறவியில் ஒருவன் செய்த நல்வினைகளும் தீவினைகளும் மறு பிறவியிலும் தொடர்வதால் அவற்றினின்று ஒருவன் தப்பவே இயலாது எனச் சமணம் வலியுறுத்துகின்றது. இதனை இளங்கோவும் தம் காப்பியத்துள் உறுதி செய்துள்ளார்.

''ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்வந் தெய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவு மொண்ணா''

(சிலம்பு ; 10 : 271 - 273)

எனக் கவுந்தியடிகளுக்குச் சாரணர் உரைப்பதாய் இளங்கோ கூறிச் செல்கிறார். விளை நிலத்திலிட்ட வித்து முளைத்துப் பயனளிக்குமாறு போல நல்வினை உரிய காலத்தில் நற்பயன் அளித்தலை தவிர்த்தல் இயலாது. அது போலவே தீவினையும் தன் பயனைத் தந்தே நிற்கும். அதனை யாராலும் ஒழிக்க இயலாது என்னும் கருத்தைக் கோவலன் கதைவழியாகப் பாமரரும் உணரும் வகையில் தெளிவு படுத்துகின்றார் இளங்கோ.

கட்டற்ற விடுதலை பெற்ற உயிரே கடவுள் என்றும், ஊற்றில் நீர் சுரப்பது போல் உயிருள் நல்வினை, தீவினையெனும் இரு-வினைகளும் சுரக்கின்றன என்றும் சமணம் கருதுகிறது. எனவே

தீவினையே பல பிறப்புக்கும் துன்பங்களுக்கும் காரணம் என அது குறிப்பிடுகின்றது. ''ஊழ் கோட்பாட்டையே தனியோர் ஆற்றலாக சமணம் கருதுகின்றது. கடவுட் கோட்பாட்டை ஏறத்தாழ ஒரு துணையாற்றலாகவே இருத்துகின்றது'' (தமிழர் மெய்யியல், ப. 162) என்பர். நல்லறிவும் நல்வினையும் இருவினைக் கட்டறுத்து வீடு பேறடையச் செய்யும் என அது வலியுறுத்துகின்றது. புறநானூற்றுப் புலவரும் இக்கருத்தை ஏற்றுப் பாடியுள்ளார்.

''நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் .... ''

(புறம் ; 192 : 9-11)

எனக் குறிப்பிடுகின்றார். இதனையே இளங்கோவும் தம் காப்பியத்துள் வலியுறுத்துகின்றார்.

''செய்வினை வழித்தாய் உயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்''

(சிலம்பு ; 28 : 167-168)

உயிர்கள் இறுதியாய்ச் சென்றடையும் தேயத்திற்குச் செல்ல உலக மாந்தர்கள் நல்வினை செய்து முயலவேண்டும் என அறைகூவல் விடுக்கின்றார்.

இளமை, செல்வம், யாக்கை நில்லாதவை; நல்வினை ஒன்றே நற்கதி சேர்க்கும்; எனவே பற்றுக்களை விடுத்து கட்டற்ற விடுதலையைப் பெறுங்கள் எனச் சிலம்பின் வழி வலியுறுத்துகின்றார் இளங்கோ.

இளமை வேகத்தில் இயங்கிய கோவலன் மாதவியைப் பிரிகையில் இளமை நில்லாதது என்பதை அறியச் செய்கின்றார். இளமையின் ஈர்ப்பில் வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து கிடந்தவனை யாண்டு சில அவனை அதன் பிடியிலிருந்து மின்வெட்டாய்த் துண்டிக்கிறது. கோவலனின் இளமைபாரா நிலைக்குக் காரணம் அவன் தன் பொருள் தளர்ச்சியால் ஏற்பட்ட தடுமாறு உளம் எனக்காட்டுகிறார் இளங்கோ செல்வம் நில்லாதது என்பதை மலையொத்த செல்வத்தை உடையவனான கோவலன் வாழவழியின்றிப் புகாரை விட்டுப் புறப்படுவதிலிருந்தே அறிகிறோம். யாக்கை நில்லாதது என்பதைக் கோவலனின் துண்டிக்கப்பட்ட தலையும் உடலும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

கருத்துக்கள் செய்திகளாய்ச் சொல்லப்படுவதில் சிறப்பில்லை; உணருமாறு உணர்த்தப்படுவதில் தான் ஓர் இலக்கியத்தின் ஆற்றல் அடங்கியிருக்கின்றது. இவ்வகையில் மேற்காட்டிய இளங்கோவின் உணர்த்துமுறை காப்பிய உத்தி சிறப்பானதாகும். சிறந்த கருத்துக்களைக் காப்பியத்தில் உயர்ந்த பாத்திரங்களைக் கொண்டு பேச வைத்திருக்கின்றார் இளங்கோ. மாடல மறையோன் வழியாகவும் இக்கருத்துக்களை உணர்த்தியுள்ளார்.

வெற்றிச் சிறப்புக்கள் மலிந்த உன் முன்னோர் யாரும் இன்று இல்லை. அதனால் யாக்கை நில்லாதது என்பதை உணர்வாய். மல்லன்மாஞாலத்து வாழ்வோர் மருங்கில் செல்வம் நில்லாதது என்பதை கனகவிசயர் முதலிய அரசர் நொடிப்பொழுதில் தம் செல்வத்தை இழந்தமையால் கண்டாய். நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை. அதனால் இளமைநில்லாதது என்பதையும் உணர்ந்திருப்பாய். நின் வாழ்நாளில் ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் அறக்களவேள்வி செய்யாது மறக்கள வேள்வி செய்வோம் ஆயினை எனச் செங்குட்டுவனுக்கு மாடலன் உணர்த்துகின்றான்.

> ''பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்
> நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே
> கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்
> இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
> முதுநீர் உலகில் முழுவது மில்லை''

(சிலம்பு; 28; 178-182)

எனச் சிறப்பான சூழலில் நிலையாமையையும் காப்பியக் குறிக்கோளையும் விளக்குகின்றார் இளங்கோ. வாழுநாள் உணர்ந்தோர் முதுநீர் உலகில் முழுவதுமில்லை என்ற கருத்தை கதைவழியாகக் கோவலன் இறப்பில் காட்டிய கவிஞர் அதனை ஆழ உணரச் செய்ய பாத்திரப் பேச்சு மூலமாகவும் விளக்கியுள்ளார்.

கதைவழி உணர்த்தல், பாத்திரப் பேச்சுவழி விளக்கல் என்ற இருநிலைகளுக்கு அப்பால் கவிக்கற்றாகவும் காப்பியக் குறிக்கோளை வலியுறுத்தியுள்ளார் இளங்கோ. இது காப்பியக் குறிக்கோளைக் கற்பவர் மனதில் நிறுத்த முனையும் இளங்கோவின் காப்பிய உத்தியாகும்.

''தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்

... ...

இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா

உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது

செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்

மல்லன்மா ஞாலத்து வாழ்வி ரீங்கென்''

(சிலம்பு; 30: 185, 199–202)

என ஞாலத்து மாந்தரெல்லாம் நல்வினை செய்து உயிரின் கட்டறுத்துக் கடவுள்நிலை எய்தவேண்டும் என்கிறார் இளங்கோ.

காப்பியக் குறிக்கோளை மூன்று நிலைகளில் உணரச் செய்த அடிகள் காப்பியக் கதையையும் அவ்வாறே பதியச் செய்துள்ளார். பல வடிவங்களில் வழங்கும் செல்வாக்குமிக்க நாடறிந்த கதையை இளங்கோ தன் காப்பியக் கதையாகக் கொண்டார். அதனால் தான் கூறும் கோவலன் கதை கற்பார் நெஞ்சில் இடம்பெற வேண்டும் என்பதற்காகக் கண்ணகி, கோவலன் ஆகியோர் கண்ட கனவு வழியாகவும் மதுராபதித் தெய்வம் மூலமாகவும் சிலம்பின் கதையை முன்னோட்டமாக மூன்று நிலைகளில் கூறிச் சென்றுள்ளார்.

கோவலன், கண்ணகி முதலிய பாத்திரங்களையும் இம்முத்திற நெறியிலேயே இளங்கோ படைத்துள்ளார். மண் தேய்த்த புகழினான், கண்டேத்தும் செவ்வேள் எனக் கவியும், இம்மை செய்தன யானறி நல்வினை என மாடலனும் கதைப்போக்கில் கோவலனின் செயலும் பேச்சும் அவன்தன் பாத்திரத்தைக் கற்பார் நெஞ்சில் அழுத்தம் கொள்ளச் செய்கின்றன.

பாத்திரப்படைப்பில் குறைபாடுடையது என்றும் பாத்திரப் பண்பில் குறைபாடுடைய்து என்றும் கவுந்தியடிகளைப் பற்றிச் சிலப்பதிகாரத் திறனாய்வாளர்கள் இருவேறு நிலையில் பேசுவர். கவுந்திப் பாத்திரப் படைப்பில் இளங்கோவின் சமயச்சார்பும் இளங்கோ என்ற பாத்திரமும் பெரும்பங்கு வகிக்கின்றன. அதனால் ''கண்ணகி கோவலர்க்குக் கிடைக்காத ஒரு பேறு கவுந்திக்குக் கிடைத்துவிடுகின்றது. 'பவந்தரு பாசம் கவுந்தி கெடுக' எனக்கூறி அவளது தொல்வினையை அகற்றிப் பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை வழங்கி விடுகின்றார் அடிகள்'' (கவுந்தி, ப. 86) என்பர் திறனாய்வாளர்.

''செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே.........''

(சிலம்பு: 9:17–18)

என்பதால் சாரணர் கவுந்திக்கு மீட்சி தந்ததாகக் கூறினார். மேலும் 'பண்டைத் தொல்வினை பாறுக' என்பது கவுந்தியின் உள்ளமே அல்லாமல் கோவலன், கண்ணகி உள்ளமாக அதனைக் கொள்ள இயலாது.

''மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவதும் அறியேன்''

(சிலம்பு: 16:61–62)

எனத் தன் வாழ்வு சிதைந்து போனதற்கு வல்வினைதான் காரணமோ எனக் கோவலன் கொலைக்களக் காதையிலேதான் மயங்குகிறான் அதற்கு முன்னர் வேறு எங்கும் அவனுக்கு வினை பற்றிய சிந்தனை வந்ததாகத் தெரியவில்லை.

உயிர்கள் தம் சொந்தமுயற்சியினாலேயே பிறவித்தளையிலிருந்து விடுபட முடியும் எனச் சமணம் குறிப்பிடுவதனால் அதனை வழங்கும் ஆற்றல் அருகதேவனுக்கும் சாரணர்க்கும் இல்லை என்பது உறுதி. சாரணர் கூற்றுப்படி பவந்தரு பாசம் கவுந்திக்குக் கெடவில்லை என்பதையும் கவுந்தியின் வேண்டுதலின்படி பந்தம் அறுபடவில்லை என்பதையும் அடுத்துவரும் காப்பிய நிகழ்ச்சிகள் உணர்த்தி நிற்கின்றன. மேற்கூறிய குற்றச் சாட்டில் உண்மை இல்லை என்பதனையே அவர்தம் என் மக்கள் காணீர் என்ற தொடரும் சாபமும், உண்ணா நோன்பும் விளக்கி நிற்கின்றன.

''உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது''

(சிலம்பு: 23:171-172)

என்பதால் அவர்தம் உயிரானது அடைய வேண்டிய துன்பத்தை அடைந்து நல்வினையால் கட்டற்ற விடுதலை அடைந்தது எனக் கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

இளங்கோ கவுந்தியடிகளைச் சார்ந்த நிலையில் சாரணர் போல் படைக்காது உணர்ச்சி அலைமோதும் பாத்திரமாகப் படைத்துள்ளார். இவ்வாறு படைக்கப் பெற்றதனால் அப்பாத்திரம் இன்றும் நம் நெஞ்சில் வாழக்கூடிய பாத்திரமாகத் திகழ்கிறது. மானுடப் பாத்திரங்கள் மனிதர்களுக்கான பலங்களோடும் பலவீனங்களோடும் படைக்கப்பெறுதல் வேண்டும். இல்லையேல் அப்பாத்திரம் நம்பகத் தன்மையை இழந்துவிடும். இவ்வரையறையை மீறிப் படைக்கப் பெறும் பாத்திரங்கள் கற்பார் நெஞ்சில் ஓர் மின்னமலைப் போல மறைகின்ற பாத்திரமாகவோ அல்லது ஒரு விந்தைப்பாத்திரமாகவோ அமைந்துவிடும்.

கவுந்தி என்ற துறவுப் பாத்திரம் துறவைச் சிறப்பித்துப் பேசியபோதும் இல்லறத்தாரைப் புகழத் தவறவில்லை மேலும் காப்பியத் தலைமைப் பாத்திரங்களை தம் மக்களாகக் கருதி தாய்மை கொண்டு சிறக்கின்றது. உடன் வந்த கோவலன் தன் வழிகாட்டலில் மதுரைக்குச் சென்ற கோவலன் கொலையுண்டான் என்றதும் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கக்கூடிய ஓர் ஒப்பற்ற மனித நேயம் மிக்கப் பாத்திரமாகத் திகழ்கிறது. இவ்வகையில் அழியாக் காப்பியத்தின் உயிர்க்கலை ததும்பும் பாத்திரமாக கவுந்தியடிகள் பாத்திரம் சிலம்பில் திகழ்கிறது.

பாத்திரப் படைப்பில் இளங்கோ கையாண்ட காப்பிய உத்தியாக இதனைக் கொள்ளலாம்.

முடிவுகள் :

வினைக்கோட்பாடு சிலம்பின் குறிக்கோளும் காப்பிய உத்தியும் ஆகும். பலவாறு வழங்கும் கோவலன் கதைகளுக்கு மத்தியில் தான் கூறவரும் கோவலன் கதை கற்பார் நெஞ்சில் ஆழப் பதிய வேண்டும் என எண்ணினார் இளங்கோ. அதனால்தான் சிலம்பின் கதையை முன்னோட்டமாக மூன்றுமுறை கூறிச்செல்கின்றார்.

குறிக்கோளை விளக்கல், பாத்திரங்களைப் படைத்தல் என்ற இரு நிலைகளிலும் கதை, பாத்திரம், கவிக்கூற்று என்ற முந்நெறியே பெரும்பான்மையும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

மானுடப் பாத்திரங்கள் மானுடத் தன்மையில் படைக்கப் பெற்றால்தான், அவை காப்பியத்தில் உயிர்க்கலை ததும்பும் பாத்திரமாகத் திகழும் என்பதே பாத்திரப்படைப்பில் இளங்கோ கைக்கொண்ட படைப்பாக்க நெறியாகும்.

தமிழ் அகராதியியல் மரபுகளும் வளர்ச்சியும்.

பேரறிஞர். எச். சித்திரபுத்திரன்.

முன்னுரை

'கொடிய குற்றவாளிகளைத் தூக்கிலிட்டோ அல்லது கடுமையான பணிகளைச் செய்யச் சொல்லியோ தண்டிக்க வேண்டாம். மாறாக அவர்களை அகராதிகளைத் தொகுக்கும்படிப் பணித்தால்போதும். ஏனென்றால் எல்லாத் துன்பங்களும் இப்பணியில் அடங்கியுள்ளன' என அகராதியியலின் தன்மை குறித்து இலத்தீன் அறிஞர் கேல்ஜர் கூறுவதாக அகராதி வல்லுநர் சுகுஸ்தா குறிப்பிடுவார் [1]. சாமுவேல் ஜான்சன் 'அகராதிப் பணி சுவையற்ற கடினமான பணி' என்பார். 'அகராதித் தொகுப்பு மிகுந்த மனச்சோர்வினைத் தரக்கூடிய, நம்ப முடியாத பெரிய நெருக்கடி உண்டாக்கும்படி' என்று மொழியியலாளர் கிளீசன் விளக்கம் தருவார் [2]. மேற்காணும் கருத்துக்கள் அகராதித் தொகுப்பின் பெரும் சுமையைக் குறிக்கும் நோக்கில் கூறப்பட்டுள்ளவை, எனினும் எல்லையில்லாத் துன்பங்களுக்கிடையே வெளியிடப்படும் ஓர் அகராதியை மற்றவர்கள் போற்றி ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவ்வகராதியைத் தொகுத்தவருக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் எல்லையில்லை எனலாம்.

1. அகராதி உருவாக்கம்.

அகராதி உருவாக்கம் உலக மொழிகளில் மிகப்பழங்காலம் முதலே நடந்து வருகின்றது. மனிதன் மொழியைக் கற்று பேசத் தொடங்கிய நாளிலிருந்து அகராதி அறிவு அவனுக்கு வந்து விடுகின்றது என்பர்[3]. கிரேக்கம், உரோம் போன்ற நாடுகளில் எழுத்துமுறை உருவான பின் பழம் ஆவணங்களில் ஓரங்களிலும் வரிகளின் இடையிலும் கடினச் சொற்களுக்குப் பொருள் எழுதப்பட்டது[4]. இம்முறை கால வளர்ச்சியில் சொல் தொகுதிகள் தோற்றம் பெற வாய்ப்பளித்தது.

இந்திய அகராதி மரபு வேதங்களுடன் தொடர்பு பெற்று வளர்ந்து வந்துள்ளது. வேதத்தில் காணப்படும் கடினச் சொற்களின் பொருளை / விளக்கங்களைக் கூறுவதன் வாயிலாக வடமொழியில் அகராதிப்பணிகள் தோற்றம் பெற்றுள்ளன. வாய்மொழியாக, வழி வழியாக வளர்ந்து வந்துள்ள இத்துறை எழுத்துமுறை உருவான பின் சொல் தொகுதிகளாகவும் அகராதிகளாகவும் பேரகராதிகளாகவும் வடிவெடுத்துள்ளது.

தமிழில் இன்று நாம் காணும் அகராதிகள் பல்வேறு பெயர்களில் பல்வேறு அமைப்புகளில் வளர்ச்சியடைந்து வந்தனவாகும். தமிழில் அகராதி எனும் சொல்தான் காலத்தால் பிந்தியது[5]. அகராதிப் பணி மிகத் தொன்மையானது கடினச் சொற்களின் பொருளைத் தருவதை அடிப்படையாகக் கொண்டு தமிழில் தொல் அகராதிப்பணிகள் நடந்தேறியுள்ளன.

2. அகராதியியல் மரபுகள்

தமிழ் அகராதிகளின் வளர்ச்சியில் வேறுபட்ட மூன்று மரபுகளைக் காணமுடிகின்றது இம்மரபுகள் பல்வேறு நிலைகளில் தோன்றி வளர்ந்து வந்துள்ள அகராதிகளின் வரலாற்றுச் சான்று மட்டும் அன்று, அவை தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியைப் பறைசாற்றுவனவாகவும் அமைகின்றன[6]. தமிழ் அகராதியியல் மரபு நீண்ட தொடர் வரலாற்றைக்கொண்டது என்பதைவிட அது பல அமைப்பு மாற்றங்களையும் திருப்பங்களையும் உள்ளடக்கியது என்று கொள்வதே சாலப்பொருத்தமாகும். இம்மரபுகள் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படினும் ஒன்றின் மீது மற்றொன்றின் தாக்கம் காணப்படுவதோடு பொது அமைப்பு, பொருளடக்கம்,

செய்திகளை வழங்கும் முறை, உத்திகளின் பயன்பாடு என்பனவற்றில் இம்மரபுகளுக்கிடையே வேறுபாடும் காணப்படு–கின்றது. தமிழ் அகராதியியல் வளர்ச்சிக்குச் சிறப்புச் சேர்க்கும் இப்பெரும் மரபுகள் கீழ்வருவன :

1. இலக்கண மரபு (தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரை)

2. நிகண்டு மரபு (கி. பி. 8ஆம் நூற்றாண்டு முதல்)

3. அகராதி மரபு (கி.பி 16ஆம் நூற்றாண்டு முதல்)

இக்கட்டுரையின் நோக்கம் தமிழ் அகராதியியல் மரபுகளையும் அவற்றின் தனிச் சிறப்புகளையும் ஆராய்ந்து விளக்குவதாகும்.

2.1. இலக்கணமரபு

மரபு இலக்கணங்களின் தலையாய பணி, மொழி அமைப்பையும் இலக்கணச் செயல்பாடுகளையும் விளக்குவதாகும். அகராதியை இலக்கணத்தின் பின்னிணைப்பு என்பார் ப்ளும் ப்லீடு.[7] இக் கூற்றிற்குச் சான்று பகரும் வண்ணம் தமிழ் இலக்கணங்களில் சொற்பொருள் கூறும் பணி இலக்கணத்தின் ஓர் அங்கமாகச் சேர்த்துக் கொள்ளப்–பெற்றுள்ளது. இலக்கணங்களில் சொற்பொருள் பகுதி இடம்பெற–வில்லை எனின், இலக்கணம் முற்றுப்பெறாத ஒன்று ஆகிவிடும் என்ற எண்ணம், இலக்கண ஆசிரியர்களிடையே நிலவிவந்துள்ளதைத் தொல்காப்பியம் முதல் தற்காலம் வரையுள்ள இலக்கணங்களில் சொற்பொருள் பகுதி இடம்பெற்றுள்ளமையிலிருந்து அறிய முடிகின்றது. இலக்கண மரபு தொல்காப்பிய உரியியலின் வழி 120 கடினச் சொற்களுக்குப்பொருள் கூறுவதுடன் ஆரம்பமானது. எனவேதான் தொல்காப்பிய உரியியலைத் தொல் அகராதியியல் பணியாகவும் தமிழின் முதல் அகராதியாகவும் கொள்வர்.[8]

இலக்கிய மொழியிலும் பேச்சுவழக்கிலும் உள்ள எளிய சொற்–களின் பொருள்களைக் காண்பதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை; அவற்றை மரபு வழியாகவும் ஆசிரியர்கள் கூறக்கேட்டும் தெரிந்து கொள்ள இயலும். பொருள் மற்றும் இலக்கண நிலையில் பொருள் புரியா கடினச் சொற்களே கருத்துப்பரிமாற்றத்தில் இடையூறு விளைவிப்பவை என்ற எண்ணம் தொல்காப்பியத்திற்கு முந்தைய காலம் முதல் மரபு வழி நிலவி வந்துள்ளது என்பதையே உரியியல்

சுட்டி நிற்கின்றது, தொல்காப்பியத்தை அடியொற்றிப் பிற மரபிலக்கணங்களும் சொற்பொருள் கூறுவதற்கெனத் தனியாக உரியியலை அமைத்துள்ளன சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைகளாகப் பகுத்திருப்பதும், பொருள் விளக்கத்திற்கெனத் தெரிவு செய்யப்பெற்றிருக்கும் உரிச்சொற்களின் செயல்பாடும் ஆகியன இன்றும் ஆய்வுகளின் வழி நிறுவப்படாதன வாக உள்ளன.

அகராதித் தொகுப்பின் இரண்டாம் கட்டப் பணி தலைச் சொற்களைத் தெரிவு செய்யும் பணியாகும். கடினச் சொற்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ள முறை குறித்தும், அச்சொற்களின் வரையறைகுறித்தும் மரபு இலக்கணங்கள் கொண்டுள்ள நெறி முறைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. உரிச் சொற்களின் எண்ணிக்கையிலும் அவற்றின் பொருளிலும் மரபு இலக்கணங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதை இலக்கணங்களில் உரிச் சொற்கள் சேர்த்துக் கொள்ளப்பெற்ற / விடப்பட்ட தன்மையிலிருந்தும் பொருள்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்தும் கண்டுகொள்ள முடிகின்றது. (காண்க பின்னிணைப்பு) இவ்வகை மாற்றத்தைப் பின் வருவது போன்று காட்டலாம்.



கடினச்சொற்கள் முற்றிலும் வழக்கிழந்து மறைந்து விடும் சூழலோ அல்லது கடினச்சொற்கள் பெருவழக்குப் பெற்று நிலைத்துவிடும் நிலைபேற்றுச் சூழலோ ஏற்பட்டதால்தான் இவ்வகை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனச் சொல்லாம்

மரபிலக்கணஉரியியலில் இடம்பெறும் சொற்றொகுதி முழுமை-யானதல்ல. சொல்—பொருள் பரந்துபட்டது; எல்லாச் சொற்களையும் தொகுத்துப் பொருள் வழங்க இயலாது என்ற எண்ணம் மரபு இலக்கணங்களிடையே நிலவி வந்தது[9]. நோக்கீட்டு (Reference) எளிமை கருதி மரபு இலக்கணங்களில் எவ்விதச் சிறப்பு உத்தியும் பயன்படுத்தப்படவில்லை. மிகக் குறைந்த அடிகளில் குறிப்பாக

ஒன்றிரண்டு அடிகளில் அமைந்துள்ள சூத்திரங்கள் மவுன முறையை ஓரளவு எளிமைப்படுத்த உதவுகின்றன எனலாம்.

அகராதித் தொகுப்பில், பொருள் விளக்கத்திற்குப் பல அகராதியியல் உத்திகள் கையாளப்படுகின்றன. இவ்வுத்திகளின் பயன்பாடு அகராதியின் தன்மைக்கும் வகைக்கும் ஏற்பவே அமைகின்றது. தொல்காப்பியர் பொதுச் செய்தியாக வழக்கொழிந்த சொற்கள் வழக்குச் சொற்களால் விளக்கப்பட வேண்டும் என்பார்[10]. ஒரு பொருள், இருபொருள் மற்றும் பல்பொருள் சொற்கள் தொல்காப்பிய உரியியலில் இடம் பெற்றுள்ளன. கடினச் சொற்களின் பொருள் விளக்கத்திற்குப் பல பொருள் தன்மை (Polysemy) ஒரு பொருட் பன்மொழி (Synonym) ஒப்புருத்தன்மை (Hsmonymy) என்பன பயன்பட்டுள்ளன [11]. சொல்லின் பொருளைத் தருவதில் ஏற்படும் சிக்கல்களைத் தொல்காப்பியர் நன்கு உணர்ந்துள்ளார். உரியியலின் பின் பகுதியில் இடம் பெறும் பல்வேறு சூத்திரங்களில் சொற்கள் எவ்வாறு தெளிவாகவும் முறையாகவும் விளக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் செல்கின்றார்[12] இச் சூத்திரங்கள் சொற்களின் பொருளை எந்நிலையிலும் மாணவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும் எனும் தன்மையனவாய் அமைந்துள்ளன.

கடினச் சொற்களைத் தவிரச் சொற்பொருண்மை (lexical semantics) குறித்து பல செய்திகள் மரபு இலக்கணங்களில் இடம் பெற்றுள்ளன. இடைச் சொற்களின் பொருள் விளக்கம் சொல் - பொருள் எனும் அகராதி அமைப்பில் அமைந்துள்ளது[13]. இங்குச் சொற்களில் ஒரு வகையான கட்டுடைவடிவும் (bound form) அதன் இலக்கண செயல்பாடும் விளக்கம் பெற்றுள்ளன.

பலபொருள் தன்மை (Polysemy) யால் ஏற்படும் பொருள் மயக்கமும் அதைத் தீர்ப்பதற்குரிய வழி முறைகளும் [14]; சொற்களின் குறிப்புப்பொருள் தன்மையும் [15]; மரபுச் சொற்களின் பயன்பாட்டு எல்லையும் [16]; மரபு இலக்கணங்களில் இடம் பெறும் சொற்பொருண்மை செய்திகளுக்குத் தக்க சான்றுகளாகும்.

இதுவரை விளக்கப்பெற்ற செய்திகளிலிருந்து அகாதியியலில் இலக்கண மரபின் தனிப்பண்புகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

△ மரபு இலக்கணங்கள் அகராதியை இலக்கணத்தின் ஒரு பகுதியாகக் கருதிப் பொருள் விளக்கம் அளித்துள்ளன.

△ இலக்கணங்கள் அவ்வவ் சூழல்களுக்கு ஏற்ப உரிச் சொற்களில் மாற்றங்கள் செய்துள்ளன △ சொற்களில் பொருள், மொழி மற்றும் பிற சூழல்களுக்கு ஏற்பவே அமைகின்றது.

△ சொற்களையும் அவற்றின் பொருள்களையும் விரிவுகருதி முழுமையாக விளக்க இயலாது △ பொருள் விளங்கா கடினச் சொற்களே பொருள் விளக்கத்திற்குரியன.

2. 2. நிகண்டு மரபு

தமிழ் அகராதியியல் வரலாற்றில் நிகண்டுகள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. நிகண்டு மரபு இலக்கண உரியியலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருந்தாலும் அமைப்பிலும் சொற்பொருளை விளக்கும் முறையிலும் நிகண்டுகள் இலக்கணங்களி லிருந்து முற்றிலும் மாறுபட்டன. நிகண்டுகளின் தலையாயபணி இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்கும் புதிதாகஇலக்கியங்களைப் படைப்பதற்கும் துணைநிற்பதாகும் இப்பணியை நிறைவு செய்யும் வகையில் நிகண்டுகள் இலக்கியங்களிலிருந்தும் பேச்சு மொழியிலி- ருந்தும் சொற்களைத் தொகுத்து வழங்கியுள்ளன. நிகண்டுகளின் சொற்றொகுதி மிகப்பரந்துபட்டது. இவ்வாறு நிகண்டுகள் விரிவாகச் சொற்களைத் தொகுத்து வழங்கிடினும் அச்சொற்களை எல்லாம் தொகுத்து உடனடியாக ஓர் அகராதியை வழங்க இயலாது. இதற்குக்காரணம் நிகண்டுகள் கையாண்டுள்ள பொருட்புலப் பாகுபாடும் (Semantic field) கருத்து வகைப்பாடும் (Thematic Classification) ஆகும். இவ்வகைப்பாட்டின் காரணமாய்ச் சொற்கள் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு இடங்களில் பிரிந்து காணப்படுகின்றன. நிகண்டுகளின் காலம் கருத்து வகைப்பாட்டுக் (Thematic Classification) காலமாகும்[17].

மரபு இலக்கணங்கள் கடினச் சொற்களை விளக்கிவரும் சூழலில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டுவரைப் பல்வேறு அமைப்புகளில் அடுத்தடுத்து நிகண்டுகள் தோன்றி வளர்ந்துள்ளன. கடினச்சொற்களுக்கு மட்டும் பொருள் தரவேண்டும்

என்ற நிலையிலிருந்து மாறி, சொல்—பொருள் அமைப்பு நிலையில் எல்லாச் சொற்களையும் விளக்குவதையும் சொற்றொகுதியைப் பல்வேறு பொருட்புலங்களாகப் பிரிப்பதையுமே நிகண்டுகள் அடிப்படைப் பணியாகக் கொண்டிருந்தன. மிக உன்னிப்பாக ஆராயும் நிலையில் நிகண்டு சொற்றொகுதியில் மிகத்தெளிவான வகைப்பாட்டு உத்தியைக் காண முடியும். இவ்வகைப்பாட்டிற்கு வடமொழி கோசங்கள் காரணமாய் அமைந்திருக்கலாம்,

தமிழ் அகராதியியல் மரபில் நிகண்டுகள் நீண்ட காலக்கட்டத்தை அடைத்துக்கொண்டுள்ளன. கி.பி,8 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 19 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் பல்வேறு வகையான நிகண்டுகள் தொகுத்தளிக்கப்பெற்றுள்ளன. எளிமை கருதியும் நோக்கீட்டுத்திறன் முயற்சியாலும் நிகண்டுகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பொருட்புல வகைப்பாட்டிலும் உட் பிரிவுகளிலும் காணப்படும் மாற்றம், சொற்களின் எண்ணிக்கையிலும் பொருள் வரையறையிலும் செய்யப்பட்ட மாற்றம், நோக்கீட்டு எளிமை கருதிச் சூத்திரயாப்புவகையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பன இதற்குச் சில சான்றுகள் ஆகும். நிகண்டுகளின் வளர்ச்சி நிலையில் குறிப்பிடத்தக்க மற்றொரு பண்பு அகரவரிசை அறிமுகமாகும். மேற்காணும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் பல சிறப்பு நிகண்டுகள் தோற்றம் பெற்றுள்ளன,

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நிகண்டு சூத்திரங்களைக்கற்பிக்க மாணவர்கள் அவற்றை மனப்பாடம் செய்யும் முறையே நிகண்டு மரபில் காணப்படுகின்றது. அகராதிகளில் சொல்லிலிருந்து பொருளுக்குச் செல்லும நிலை காணப்பட நிகண்டுகளில் பொருட்-புலங்களையும் கருத்து வகைப்பாடுகளையும் அறிந்த பிறகே சொல்லின் பொருளைக்காணும் நிலையுள்ளது. ஒரு சொல்லின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனின் அச்சொல் நிகண்டின் எப்பிரிவில் வருகின்றது என்பதை முதற்கண் தெரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு பிரிவுகளில் ஒரு சொல் இடம்பெற்றிருப்பின் எல்லாப் பொருள்களையும் ஒன்று சேர்த்த பின்னரே சொல்லின் முழுப்பொருளையும் பெற இயலும். மேலும் சொல்லின் எப்பண்பு குறித்து ஒருவர் பொருள் விளக்கம் பெற விரும்புகின்றார் என்பதைப் பொறுத்தும் நிகண்டுகளின் பயன்பாடு அமைகின்றது.

சொல்லின் அனைத்துப் பண்புகளும் நிகண்டுகளில் குறிக்கப் பெறுவதில்லை. பலபொருள் தன்மை, ஒரு பொருட்பன் மொழிகள், தொகைபற்றிய செய்திகள் போன்றன நிகண்டுகளில் இடம் பெறுகின்றன. சொற்களின் இலக்கணச் செய்திகள் நிகண்டுகளில் இடம் பெறுவதில்லை. தமிழில் ஓரளவு புலமை பெற்றவரே நிகண்டுகளை விரைவாகவும் பயனுள்ளதாகவும் பயன் படுத்தஇயலும். நிகண்டுச் சூத்திரங்களை மனனம் செய்வதில் ஏற்பட்ட சிக்கல்களும் நிகண்டுகளைப் பயன்படுத்துவதில் உள்ள பொது இடையூறுகளும் நிகண்டுகளின் எளிமையாக்கத்திற்கு வித்திட்டுள்ளன. எளிமையாக்க முயற்சிகள் நிகண்டுகளின் சூத்திர நடை மாறாவண்ணம் மேற்கொள்ளப்பட்டன. இம் முயற்சியின் தொடர்பாகச் சொற்களை அவற்றில் இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (ஓரெழுத்துச்சொல், ஈரெழுத்துச்சொல் ....) பொருள் கூறும் முறையும், சொற்களைப் பொருள்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (ஒரு பொருள் சொல், இரு பொருள் சொல் ....) வரிசைப் படுத்தும் முறையும் சொற்களை எதுகை, மோனையில் பட்டியலிடும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டன[19].

நிகண்டு மரபில் குறிப்பிடத்தக்க மற்றொரு பண்பு அகரவரிசையின் அறிமுகமாகும் அகரவரிசை முறை நிகண்டுகளில் முழு நிலையில் பின்பற்றப்படவில்லை. அகராதி நிகண்டு (1595) சூத்திர நடையில் முதல் எழுத்து அளவில் முதன் முதலில் அகரவரிசை முறையை அறிமுகம் செய்தது. பின்னர் 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் வெளியான பொதிகை நிகண்டுஎனும் நிகண்டு அகரவரிசையை இரண்டாம் எழுத்துவரையும் விரிவு செய்தது. முதல் எழுத்திலிருந்து இரண்டாம் எழுத்து அகரவரிசைக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகள் ஆகியுள்ளன. இவைதவிர எளிமையாக்கத்திற்கென ஆங்காங்கே யாப்பு வகையிலும் நிகண்டுகளில் பல மாற்றங்கள் செய்யப்பெற்றுள்ளன.

2.3 அகராதி மரபு

அகராதியியல் பண்புகளையும், உத்திகளையும் உள்ளடக்கிய மரபு அகராதி மரபாகும். இது தலைச்சொல் — பொருள் எனும் அமைப்பைக் கொண்ட உரைநடை மரபாகும். நிகண்டுகள்

அகராதி மரபின் வளர்ச்சிக்கு அடித்-தளமாய் அமைந்துள்ளன. தமிழ் அகராதியியல் வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் இலக்கண மரபு, நிகண்டு மரபு, அகராதி மரபு ஆகிய மூன்று மரபுகளும் வழக்கில் இருந்தமையையும் ஒவ்வொரு மரபிலும் தனித்தனியாகச் சொற்பொருள் கூறும் பணி நடைபெற்று வந்துள்ளதையும் காணமுடியும்.

இலக்கண உரியியலிலும், நிகண்டுகளிலும் சொற்கள் சூத்திர வடிவில் அமைந்திருந்ததால் உறுதியான பயன்பாட்டிற்கு எல்லாச் சூத்திரங்களையும் ஒருவர் மனப்பாடம் செய்ய வேண்டிய சூழல் நிலவிவந்தது. நிகண்டுகளில் சொற்களின் எண்ணிக்கை பெருகப்பெருகக் கற்பித்தல் முறை கடினமானது. நன்றாகக் கற்றறிந்த அறிஞர்களுக்குக் கூட நிகண்டுச் சூத்திரங்களை மனப்-பாடம் செய்வது கடினமான ஒன்றாகியது. இதனடிப்படையில் நோக்கு நூல்களின் பொது அமைப்பில் பல மாற்றங்கள் செய்யும் தேவை ஏற்பட்டது. ஒப்பித்தல் மற்றும் மனை முறை உத்திகளின் பயனின்மையும் நிகண்டுகளின் பயன் பாட்டிற்குத் தேவைப்படும் முன் அறிவும் முன் உழைப்பும் அகராதித் தொகுப்பிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளன. மதப் பணியின் பொருட்டுத் தமிழகம் வந்த ஐரோப்பியரின் வருகையும் அவர்களின் மதப்பிரச்சாரக் கருவியாகத் தமிழ் பயன்பட்டமையும் ஐரோப்பியர் களின் தமிழ் கற்கும் ஆர்வமும் அறிவியல் முறையான அகராதிகள் பல தமிழகத்தில் தோன்றி வளர்ந்திடக் காரணங்களாய் அமைந்தன. நிகண்டுகளின் அமைப்பிற்கும் அகராதிகளின் அமைப்பிற்கும் பல வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் தலையாயது அமைப்பு மற்றும் நடை தொடர்பான வேறுபாடுகள் ஆகும். குறிப்பிட்ட ஒரு சொல் நிகண்டுகளில் விளக்கம் பெற்றுள்ளதா என்பதை அறிய நிகண்டு களின் பல பகுதிகளையும் ஆராய வேண்டிய நிலை உள்ளது. இத்தடங்கல் அகராதியில் இல்லை. சொல்லையும் சொல்லின் பொருள் விளக்கங்களையும் எளிதாகவும் விரைவாகவும் கண்டறியும் தன்மை அகராதிகளுக்கே உரிய பண்பாகும். தெளியும் எளிமையும் கருதிச் சூத்திரங்கள் அகராதிகளில் உரைநடையாக மாற்றம் பெற்றுள்ளன. நிகண்டுகள் சொற்களின் காப்பகமாக விளங்க அகராதிகள் நீதிமன்றமாகவும், தீர்ப்பகமாகவும் செயற்படும் தன்மையைப் பெற்றன.

2.4 அகராதித் துணை மரபு

தமிழ் அகராதி மரபு இரு வேறுபட்ட துணை மரபுகளைக் கொண்டுள்ளது.

அவை : 1. ஒருமொழி மரபு அல்லது தமிழ்த்தனி மரபு

2. இருமொழி மரபு அல்லது மேனாட்டினர் (ஐரோப்பியர்) மரபு

இவ்விரு துணை மரபுகளும் அவ்வவற்றுக்குரிய தனிப்பண்புகளையும் சிறப்புக் கூறுகளையும் பெற்று வளர்ந்துவந்துள்ளன. இவ்விரு துணை மரபுகளும் ஒரு காலகட்டத்துக்குரியவை. எனினும் தொடக்கக் காலத்தில் ஒன்றன் தாக்கம் மற்றொன்றில் இல்லாமல் தங்கள் தங்கள் மரபுகளைத் தக்க வைத்துள்ள நிலை அமைந்திருந்தது. எனினும், பிற்காலத்தில் ஒரு மொழி அகராதிகள், இருமொழி அகராதிகளுக்குரிய சொற்களை வழங்கும் மூலமாகவும் இருமொழி அகராதிகள், ஒரு மொழி அகராதிகளுக்குப் பல நவீன அகராதியியல் உத்திகளை வழங்கும் கையேடாகவும் விளங்கி வந்துள்ளன.

இரு வகைத் துணை மரபுகளிலும் காலத்தால் முந்தியது தமிழ் இருமொழி அகராதி மரபாகும் தமிழில் வெளிவந்த முதல் இருமொழி அகராதி தி புரெயன்சாவால் தொகுக்கப்பட்ட தமிழ்-போர்த்துகீசு அகராதி ஆகும் (1679). ஒரு மொழி அகராதி மரபு வீரமாமுனிவர் எனும் பெஸ்கியின் சதுரகராதியிலிருந்து (1732) தோற்றம் பெற்று வந்துள்ளது. தமிழ் மொழிக்கு வீரமாமுனிவரின் இலக்கியம், மொழி மற்றும் அகராதிப் பணி ஒப்பிடற்கரிய பணியாகும்.

நிகண்டுகளின் பொருட்புலவகைப் பாட்டைத் தழுவி வீரமாமுனிவர் சதுரகராதியை நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுத்துப் பொருள் வழங்கியுள்ளார்[20]. நான்கு பிரிவுகளிலும் அகரவரிசை பின்பற்றப்பட்டுள்ளமை இவ்வகராதியின் குறிப்பிடத் தக்க பண்பாகும். சதுரகராதியைத் தொடர்ந்து வந்த பல ஒரு மொழி அகராதிகளிலும் உட்பிரிவுகள காணப்படுகின்றன[21]. இவ்வுட்பிரிவு முறை 19ஆம் நூற்றாண்டு வரை நீடித்துள்ளது. 19ஆம் நூற்றாண்டிற்குப் பின்வந்த ஒரு மொழி அகராதிகளில்

உட்பிரிவு முறை பின்பற்றப்படவில்லை. எனினும், ஒட்டுமொத்த அகரவரிசை முறை பின்பற்றப்பட்டுள்ளது.

இருமொழி அகராதிகளில் தலைச் சொற்கள் எவ்வித உட்பிரிவுகளும் இன்றி அகர வரிசையில் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு இருமொழி அகராதியும் விரிவான முன்னுரையையும், நோக்கம், தரவு, பயன்படுத்துவோர்க்கான செய்தி போன்றவற்றையும் பல அகராதியியல் உத்திகளையும் உள்ளடக்கியுள்ளன.

2.4 1 தமிழ் ஒரு மொழி அகராதி அமைப்பு

அமைப்பு மற்றும் பொருள் விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் ஒருமொழி அகராதிகளைப் பின்வருமாறு இருவேறு வகைகளாகப் பகுக்கலாம் :

அமைப்பு : 1 சொற்றொகுதி பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டிருத்தல்

அமைப்பு : 2 சொற்றொகுதி எவ்வித உட்பிரிவுமின்றிக் கோர்வையாக இருத்தல்

அமைப்பு : 1 அகராதிகள் பெயர், பொருள், தொகை, தொடை எனும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன இவ்வகையின் கீழ் தோன்றும் எல்லா அகராதிகளும் நான்கு உட்பிரிவுகளைக் கொண்டிருப்பதில்லை. சில அகராதிகள் மூன்று பிரிவுகளையும் சில இரு பிரிவுகளையும் மட்டும் கொண்டு வழங்கப்பெற்று வந்தன. கி.பி. 18ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டத்தில் தோன்றிய ஒரு மொழி அகராதிகள் முதல்வகை அகராதிகளாக அமைந்துள்ளன. கி பி. 1900க்குப் பின் தோன்றிய ஒருமொழி அகராதிகள் முதல்வகையிலிருந்து மாறி அமைப்பு இரண்டைத் தழுவியுள்ளன. அமைப்பு – 1 அகராதிகள் அகர வரிசைமுறையில் அமைந்து இருந்தாலும் நிகண்டுகளைப் போன்று இவற்றைப் பயன்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. ஒரு சொல்லின் முழுப்பொருளை நான்கு பகுதிகளையும் ஒத்து நோக்கிய பின்னரே அறிந்துகொள்ள இயலும். முதல் வகை அகராதியின் திறன் அவ்வகராதியைப் பயன்படுத்துவோரின் புலமையைப் பொறுத்தே அமைகின்றது.

அகராதிச் செய்திகளைப் பொறுத்த மட்டில் அமைப்பு–1அகராதிகள் குறைவான அகராதியியல் உத்திகளையும், விளக்கங்களையும் கொண்டுள்ளன. சொற்களின் பொருளைத் தவிர பிற செய்திகள் முதல் வகையில் இடம் பெறுவதில்லை அடுத்தடுத்து வந்துள்ள ஒரு மொழி அகராதிகளிலும் அவற்றின் பல்வேறு பதிப்புகளிலும் சொல் மற்றும் பொருளின் எண்ணிக்கையை உயர்த்தும் முயற்சியே மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

இருமொழி அகராதி மரபு நன்கு வளர்ச்சியடைந்த ஒன்றாகும். எல்லா இருமொழி அகராதிகளும் அமைப்பு–2 வகையைச் சார்ந்தன. முன்னர்க்கூறியது போல் மதத்தை வளர்க்கும் பொருட்டும் மக்களிடையே பழகும் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலும் மக்களின் பேச்சைப் புரிந்து கொள்வதற்காகவும் மேல்நாட்டினர் இருமொழி அகராதிகளைத் தொகுத்து அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எனவே, சொல்லின் அனைத்து செய்திகளையும் குறிப்பாகப் பேச்சு வழக்கு, வட்டார வழக்கு, சமுதாய வழக்குச் சொற்களையும் அகராதியில் சேர்த்துக் கொள்ளத் தொடங்கினர். ஒவ்வொரு இரு மொழி அகராதியும் விரிவான முன்னுரையைக்கொண்டு அமைந்துள்ளது. ஒரு மொழி அகராதிகளைப் போன்று இல்லாமல் அடுத்தடுத்து வரும் இரு மொழி அகராதிகளின் பதிப்புகள் மேலும் செம்மைப்படுத்தப்பட்டுள்ள நிலையைக் காண முடிகின்றது. இரு மொழி அகராதிகளில் சொற்கள் வகைப்படுத்தப் பெற்றுள்ளன. பொருள்கள் எண்ணிட்டு, வரிசைப் படுத்தப்பெற்றுள்ளன. வட்டார, சமுதாய இனச்சொற்கள் குறிப்பான்களின் உதவியால் தனியாகக் குறிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு இரு மொழி அகராதியும் பல புதுப்புது உத்திகளைக் கையாண்டு ஒன்றை விட மற்றொன்று சிறந்து விளங்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதன் விளைவால்தான் பெரும் நிலையிலான ஒரு மொழி அகராதியின் தொகுப்பிற்கு இரு மொழி அகராதிகள் உத்திகளையும், சொற்களையும் வழங்கும் மூலங்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பெற்ற தமிழ்ப் பேரகராதி எனும் விளக்கமுறை அகராதிக்கு வின்சுலோவின் தமிழ்–ஆங்கில அகராதி மிகப் பயனுள்ள மூலமாகச் செயல்பட்டுள்ளது.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து பின்வருவனவற்றைத் தமிழ் அகராதி மரபின் சிறப்புப் பண்புகளாகக் கொள்ளலாம்.

△ தமிழ் அகராதி மரபு இரு துணை மரபுகளைக் கொண்டது

△ ஒருமொழி, இரு மொழி அகராதிகளில் ஒரு மொழி அகராதி இரு வேறுபட்ட (அமைப்பு 1, 2) வகைகளைக் கொண்டுள்ளது.

△ ஒரு மொழி அகராதிகளின் வளர்ச்சிப் படிநிலை வளர்ச்சியாக அமைந்துள்ளது

△ ஒரு மொழி அகராதிகள் தொடக்கக் காலத்தில் சொற்பொருளில் மட்டும் ஆர்வம் காட்டியுள்ளன.

△ ஐரோப்பியரின் வருகையால் தமிழ் இரு மொழி அகராதிகளின் பணி சிறப்புற்றது.

△ இரு மொழி அகராதிகள் பல்வேறு அகராதியியல் உத்திகளையும் உள்ளடக்கியுள்ளன

முடிவுரை :

△ தமிழ் அகராதியியல் மரபு நீண்டகாலமாகத் தொடர்ந்து வருவது. தமிழ் அகராதியியல் வரலாற்றில் காணப்பெறும் இலக்கணமரபு, நிகண்டுமரபு, அகராதிமரபு எனும் மூன்று மரபுகளும் தத்தமக்குரிய சிறப்புக்களையும் தனித்தன்மைகளையும் பெற்றுத் திகழ்கின்றன.

△ கடினச் சொற்களுக்கு மட்டும் பொருள் தருவது இலக்கண மரபாகும். நீண்டகாலமாகத் தொடர்ந்துவரும் இம்மரபு நிகண்டுகளின் தோற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்துள்ளது.

△ சொற்களின் பொருட்புலப் பாகுபாட்டையும் கருத்து வகைப் பாட்டையும் தழுவியது நிகண்டு மரபாகும். எளிமையாக்கத்தின் விளைவாய் நிகண்டுகளின் அமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

△ அகராதி மரபு இரு துணை மரபுகளைக் கொண்டது. ஒரு மொழி அகராதிமரபு தமிழ்த்தனி மரபாகும். ஐரோப்பியரின் வருகையால் இருமொழிமரபு சிறப்புற்றுவளர்ச்சியடைந்தது.

△ ஒரு மொழி அகராதிகள் இருமொழி அகராதிகளுக்குச் சொற்களை வழங்கும் மூலமாகத் திகழ்ந்தன. இருமொழி அகராதிகள் ஒரு மொழி அகராதிகளுக்குப் பொருள் விளக்க நெறி முறைகளையும் அகராதியியல் உத்திகளையும் வழங்கும் நிலையில் அமைந்திருந்தன.

△ தமிழ் அகராதிகள் இலக்கண மரபில் பிறந்துநிகண்டு மரபில் தவழ்ந்து ஒருமொழி அகராதி மரபில் நடைபயின்று இரு மொழி அகராதி மரபில் வளர்ச்சியடைந்து தற்பொழுது பேரகராதிகளாகவும், சிறப்பகராதிகளாகவும் அறிவியல் அகராதிகளாகவும் திகழ்கின்றன.

பின்னிணைப்பு :

இலக்கணம்	உரிச்சொற்களின் எண்ணிக்கை
தொல்காப்பியம்	120
நேமிநாதம்	29
நன்னூல்	45
இலக்கணவிளக்கம்	69
முத்துவீரியம்	52

இலக்கணம்	மொத்த உரிச்சொற்கள்	தொல்காப்பிய உரிச்சொற்கள்	புதியவை
தொல்காப்பியம்	120	120	—
நேமிநாதம்	29	23	6
நன்னூல்	45	9	36
இலக்கண விளக்கம்	69	69	—
முத்துவீரியம்	52	42	10

1. Manual of Lexicography, Zugusta, P. 15
2. Introduction to lexicography, Singh, R. A. P. 2
3 Lexicography, Katre S.M.P. 3
4. –ibid– p. 3
5. அகராதி எனும் சொல் முதலில் அகராதி நிகண்டில் (1594) அறிமுகம் செய்யப்பட்டது.
6. 'தமிழ் ஒரு மொழி அகராதி மரபு' (உருளச்சு), சித்திரபுத்திரன். எச்.
7. Language, Bloomfield, p. 274
8. தமிழ் அகராதிக்கலை, சுந்தரசண்முகனார். ப. 116. தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ஜெயதேவன். வ.,
9. தொல்காப்பியம் — உரியியல், நூற்பா. 95.
10. – மேலது – நூற்பா. 2
11. 'சங்க இலக்கியத்தில் பலபொருள் சொற்கள்' (ஆய்வேடு), இராதிகாதேவி. அ, ப. 67.
12. தொல்காப்பியம் - உரியியல் – நூற்பா 95, 96, 97.
13. – மேலது – இடையியல் நூற்பா 4, 5, 6.
14. – மேலது – கிளவியாக்கம், நூற்பா 52, 53, 54.
15. – மேலது – பெயரியல், நூற்பா 3
16. - மேலது - மரபியல், நூற்பா 2, 3, 4.
17. Tamil Lexicography, p. 38
18. – ibid – p. 41
19. கைலாசநிகண்டு (கிபி. 17). பல்பொருள் சூடாமணி நிகண்டு (கிபி. 17)

20. சதுரகராதி (சதுர் அகராதி) சதுர்நான்கு, சதுரகராதி (1732) பிரிவுகளைக் கொண்ட அகராதி.

21. சதுரகராதி (1732) தமிழ்ப் பேரகராதி (1899) மானிப்பாய் அகராதி (1842) மாணவர் தமிழ் அகராதி (1921).

துணைநூல் பட்டியல்

1. இராதிகாதேவி. அ; (1995) சங்க இலக்கியத்தில் பலப்பொருள் சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்) - முனைவர்பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. சித்திரபுத்திரன் எச்; (1996) 'தமிழ் ஒரு மொழி அகராதி மரபு' (உருளச்சு) அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகக் கருத்தரங்கம், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

3. ஜெயதேவன். வ., (1985) தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

4. Bloomfield, (1933) Language. Holi Richart, Newyork.

5. Gregory James (1991), Tamil Lexicography, Mac Niemeyer Verlag, Tubingen.

6. Katre, S. M., (1985), Lexicography, Annamalai University, Annamalai Nagar.

7. Singh, R. A., (1982), An Introduction to Lexicography CIIL, Mysore.

8. Zugusta, Ladislaw, (1971), Manual of Lexicography, Mouton The Hauge.

எனைத்தானும் நல்லவை வினாவுக! ...

"கதிர்" விடுக்கும் விடைகள்...

சங்கவி, மதுரை

△ "காதல்" என்றால் என்ன?

'காதல்' என்ற இச்சொல்லிற்கு இதுவரை முழுமையாக விளக்கம் சொன்னவரில்லை! பிளாட்டோ எவ்வளவு பெரிய தத்துவமேதை! அவர் காதலை ஒரு தொன்மம் மூலம்தான் விளக்குவார். இறைவன் ஆணையும் பெண்ணையும் ஒரு காலத்தில் ஒருருவமாகவே படைத்-தான். ஆனால், இவ்வுருவத்தின் பேராற்றல்கண்டு பொச்சாப்பு கொண்ட தேவர்கள் இவ்வுருவத்தை ஆணும் பெண்ணுமாகப் பிரித்து விட்டனர். அன்றுதொட்டு இவ்விரு வேறு உருவங்களும் ஒருருவமாதற்கு எந்த உள்ளுணர்வு அவர்களை உந்துகின்றதோ அந்த உணர்வைத்தான் "காதல்" என்கிறோம் என்று "காதல் தொன்மத்தை" மெய்ச்சுவைபட விளக்கினார். நம்முர் உமையொரு பங்கன், கதை போல் இருக்கிறதல்லவா? அன்புடை நெஞ்சம் தாம் கலக்கும் காதல் நெறியை, வள்ளுவர் அழகாக விளக்குவர். மலரைக் காட்டிலும் மென்மையான உணர்வுகளால் இரு உள்ளங்கள் பின்னிப் பிணைவதே காதல்! என்பர்.

ஆதலால், சிலரே அதன் செவ்வி தலைப்படுவார் என்பதை, ''மலரினும் மெல்லியது காமம் சிலரதன் செவ்வி தலைப்படுவார்'' என்பர். காதலுக்கு இன்ப உணர்வே அடிப்படை ஆகும். 'பிராயிட் கருத்துப்படி. குழந்தையிடம் கூட இந்த அவா உண்டு என்கிறார்.

தொல்காப்பியர், காதல் இன்பத்தை ''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்'' என்பர்.

சங்க இலக்கிய அகப்பாடல்கள் படித்தால், காமக் கிளர்ச்சியைச் சமனிலைப் படுத்தித் தூய அன்பிற்கு இடனாய காதலின் மென்மை-யையும் மேன்மையையும் அறிதல் கூடும், காதல் காட்டும் உள-வியலையும் தத்துவத்தையும் அறிந்து வாழ்வாங்கு வாழ முடியும்.

சேந்தன் செழியன், நெய்வேலி.

△ புராணத்தை நம்பலாமா? – வடமொழிப் புராணங்கள தாமே தமிழில் உள்ளன!?

புராணத்தைத் தமிழில் 'தொன்மம்' என்ற சொல்லால் குறிப்பிடுவர். தொல்காப்பியர் தொன்மை என்ற சொல்லைப் பயன்-படுத்தியுள்ளார்.

தொன்மங்கள் நம் முன்னோர்களின் எண்ணங்களின் வரலாறாகும். மேலும் தொன்மங்கள் ஒருவரின் கற்பனைக் கூறுகள் அல்ல! ஓர் இனத்தின் கூட்டுக் கற்பனை எனலாம். எனவே ஓர் இனத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவ்வினத்தில் காணப் படும் தொன்மங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். தொன்மத்தைக் கூர்ந்து ஆராய்ந்தால் அதிலே காணப்படும் சுட்டுரை அல்லது படிம உண்மை (symbelic truth) காலங்கடந்து நின்று பல செய்திகளை நமக்குத் தருகின்றன.

தொன்மங்கள் ''பொய்மைகளின் புகலிடங்கள் அல்ல. உண்மைகளின் வாழ்விடங்கள், உறைவிடங்கள் சமுதாயக் கருத்துக்களின் வாழ்விடங்கள்; எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம்; நினைவு-களின் ஊற்றுக் கண்'' என்பர் கம்பெல்! அரிஸ்டாடில், ''தொன்மம் என்பது இலக்கியங்களின் ஆன்மாவாகும்'' எனக் கூறுவர்.

உண்மையான தொன்மங்கள் அனைத்திலும் உட்பொருள்கள் புதைந்து காணப்படும். அவற்றை உய்த்தறிந்து உலகிற்கு உணர்த்த முடியுமானால் ஏற்படும் நன்மைகள் ஏராளம்!

எனவே, தொன்மங்கள் நன்மைக்கு நம்பலாம்; பொய்மை-களையும் கற்பனைப்புனை சுருட்டுக்களையும் தொன்மம் என நம்பி ஏமாறக் கூடாது.

தொன்மங்களில் வடமொழித் தொன்மம்; தமிழ்த் தொன்மம் என்று பாகுபடுத்தல் மடமை.தொன்மம் இல்லாத தொன்மமொழிகளே இல்லை; பழந்தமிழில் திணை நிலைத் தெய்வங்கள் எல்லாம் இயற்கைத் தொன்மங்கள்! மனித எண்ணங்களின் வழித் தொன்-மங்கள் ஊர்கோலமல்ல - உலகவலம் வருகின்ற மனித மனங்கள் மூலப்படிவுகளால் (Arehytypal feeling) பாதிக்கப்படுகின்றன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இத்தகைய எண்ணங்கள் பல்வேறு வழிகளில் பரவுகின்றன. அச்சம் வர ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? ஆஞ்சாமையை ஒருவருக்குப் போதித்தால்-தான் வருமா? காதலைக் கற்றுத் தர வேண்டுமா? இவை போன்ற உணர்ச்சிகள் தொன்மங்களின் தேர்கள்! - அவைகளை - அலங் கரித்தால் - அணிசெய்தால் நீங்கள் சிறந்த படைப்பாளராகத் திகழலாம்! தொன்மங்களைப் படிப்பீர்! உலக வலம் வாரீர்!

முருகன். பரங்குன்றம்

△ தமிழ் வளமுடன் வளர வழி யாது?

முன்பு கழகங்கள், 'சங்கங்கள்' என்ற பெயரில் தமிழ் வளமுடன் வாழ வழிவகுத்தான் குன்றக் குமரன் (முருகன்) அருள் புரிந்தாக கதை உண்டு!! ஆனால், இனி தமிழ் வளமுடன் வாழத் தமிழர்கள் வாழ வேண்டும்! அத்தகைய தமிழர்க்குத் தமிழ் உணர்வு வேண்டும். ஐந்தமிழில், அறிவியல் தமிழ் எல்லா நிலைகளிலும் வளரவேண்டும் ஆங்கிலத்தை மூக்குக் கண்ணடியாகப் பயன்படுத்தலாமே தவிர, கண்களாகக் கருதக்கூடாது! தமிழ் வகையாக வாழ வழி ஏற்-பட்டால்தானே, பின்னர் வளமான வாழ்வு ஏற்படும்!

பொறுப்பில் இருப்பவர்கள், தமிழ் வளர இலட்சியங்களை வைத்துக் கொள்ளுவதோடு மட்டுமல்லாது, பலகோடி இலட்-சங்களைச் செலவு செய்ய வேண்டும். தமிழைச் செவ்வியல் மொழி (Classical Language) என்று உலகு அறியவேண்டும். உலகில் எந்த மொழியும் தானாக வளருவதில்லை! ஆளுநின்றவர்கள் அருளை விட அவர் தரும் பொருளால் தமிழ் வாழும்! வளரும்! ஒரு

மொழி அழிந்து போவதற்குப் பின்வரும் ஐந்து காரணங்கள் ஏதுவாகும்.

1. பண்பாடு அழிந்து போனால், மொழி அழிந்து போகும்! (இதற்குக் கிரேக்க இலத்தின் மொழிகளைச் சான்றாகக் கூறலாம்)

2. ஒப்பீட்டை மறுத்துத் தம் மொழிதான் தேவபாடை என்று தருக்கிப் பிற சாதியினர் எம் மொழியைப் படிக்கலாகாது எனக்-கூறி, ஓதுதலும் ஓதுவித்தலும் தம் இனத்தார்க்கே ஒல்லும் என்ற வரன்முறையைக் கடை பிடித்தால் மொழி அழியும்! (இதற்குச் சமஸ்கிருதத்தைக் எடுத்துக்காட்டாகக் காட்டலாம்)

3. பகைவர்கள் ஆதிக்கத்தால் பண்பாடு மாறுவதால் தம்மொழிகள் மதிப்பிழத்தல்... (பாலி, கிரந்தம், முதலிய வடமொழியின் கிளைகள் தமிழ் மாறி மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்று உருமாறுதல் ஒரினத்தினா தம் நாட்டைவிட்டு அகன்று பிறிதோர் இடத்தில் குடியேறித் தலைமுறை தலையாகத் தாய் நாட்டினரோடு தொடர் பற்றுப்போவதினால் மொழி மறந்து அழிந்து போதல் (மௌரிசியஸ் நாட்டில் தமிழை மறந்த ''திரியோல்'' பேசுதல்...

4. அறிவியலுக்கு ஒரு மொழி, அரசியலுக்கு ஒருமொழி, பிற-மொழி பேசினால் பெருமை, தம் மொழியில் உரையாடினால் சிறுமை என்ற தாழ்வு மனப்பான்மை மேலிட, வாழ்ந்தால் மொழி அழிந்திட வாய்ப்பு உண்டாகும்.

மெல்லத் தமினிச் சாகும் என்று பரங்கியர் ஒருவன் கூறுவதாகப் பாடும் பாரதியார், தமிழ் அழியாமல் இருக்க அறிவியல் கலைகளைத் தமிழில் ஆக்கித்தரச் சொல்கிறார் காரணம் தமிழ்மொழி அழியாமல் காப்பதற்குத் தான்!...

எவ்வளவு சிறந்த மொழியாயினும், மொழிகள் தாமே வாழ்-வதில்லை! ஆட்சி செய்வோர் சட்டங்கள் இயற்றுவதின் மூலம்தான் மக்களிடையே மனமாற்றம் ஏற்படும். தன்மொழி அறியாமல் தன் நாட்டில் வகையாகவும் வளமாகவும் வாழமுடியாது என்ற நிலை ஏற்படவேண்டும்.அப்போதுதான் தமிழ் வளமுடன் வாழவழி ஏற்படும்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில்
அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக்குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள
அரிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்த பரிசோதனை
   - இரத்தவகை
   - சர்க்கரை அளவு
   - சீரம் கிரியேட்டினைகள்
   - கொலஸ்ட்ரால் அளவு
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.

கூடுதல் பலன்கள்

- இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு
- இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்கள் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

இத்தனையும் ரூ.400/- செலவிலேயே

பெண்களுக்கு : பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ.50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

only private Hospital in South Tamilnadu Approved by state Govt.
for Govt. Employees (G.O Ms. No.4901/19/6/95)
லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.
Ph:. Call 42481 (5 Lines) 535977 3 (Lines)

உயர்ந்த மருத்துவம், குறைந்த செலவில்

UTHAYAM OFFSETS
No.4, Moulana Street, Anna Nagar, MADURAI - 625 020.